**Signature and Name of Invigilator**

1. (Signature) ____________________

   (Name) ____________________

2. (Signature) ____________________

   (Name) ____________________

**OMR Sheet No. :** ...............................................

(To be filled by the Candidate)

**Roll No.** | | | | | | | |

(In figures as per admission card)

**Roll No.** ____________________

(In words)

**Test Booklet No.**

**D – 2608**

**PAPER – II**

# TAMIL

**Time : 1¼ hours]** **[Maximum Marks : 100**

Number of Pages in this Booklet : **16** Number of Questions in this Booklet : **50**

## Instructions for the Candidates

1. Write your roll number in the space provided on the top of this page.
2. This paper consists of fifty multiple-choice type of questions.
3. At the commencement of examination, the question booklet will be given to you. In the first 5 minutes, you are requested to open the booklet and compulsorily examine it as below :
   (i) To have access to the Question Booklet, tear off the paper seal on the edge of this cover page. Do not accept a booklet without sticker-seal and do not accept an open booklet.
   (ii) **Tally the number of pages and number of questions in the booklet with the information printed on the cover page. Faulty booklets due to pages/questions missing or duplicate or not in serial order or any other discrepancy should be got replaced immediately by a correct booklet from the invigilator within the period of 5 minutes. Afterwards, neither the question booklet will be replaced nor any extra time will be given.**
   (iii) After this verification is over, the Test Booklet Number should be entered in the OMR Sheet and the OMR Sheet Number should be entered on this Test Booklet.
4. Each item has four alternative responses marked (A), (B), (C) and (D). You have to darken the oval as indicated below on the correct response against each item.

   **Example :** (A) (B) ● (D)

   where (C) is the correct response.
5. Your responses to the items are to be indicated in the Answer Sheet given **inside the Paper I booklet only**. If you mark at any place other than in the ovals in the Answer Sheet, it will not be evaluated.
6. Read instructions given inside carefully.
7. Rough Work is to be done in the end of this booklet.
8. If you write your name or put any mark on any part of the test booklet, except for the space allotted for the relevant entries, which may disclose your identity, you will render yourself liable to disqualification.
9. You have to return the test question booklet to the invigilators at the end of the examination compulsorily and must not carry it with you outside the Examination Hall.
10. **Use only Blue/Black Ball point pen.**
11. **Use of any calculator or log table etc., is prohibited.**
12. **There is NO negative marking.**

## परीक्षार्थियों के लिए निर्देश

1. पहले पृष्ठ के ऊपर नियत स्थान पर अपना रोल नम्बर लिखिए।
2. इस प्रश्न-पत्र में पचास बहुविकल्पीय प्रश्न हैं।
3. परीक्षा प्रारम्भ होने पर, प्रश्न-पुस्तिका आपको दे दी जायेगी। पहले पाँच मिनट आपको प्रश्न-पुस्तिका खोलने तथा उसकी निम्नलिखित जाँच के लिए दिये जायेंगे जिसकी जाँच आपको अवश्य करनी है :
   (i) प्रश्न-पुस्तिका खोलने के लिए उसके कवर पेज पर लगी कागज की सील को फाड़ लें। खुली हुई या बिना स्टीकर-सील की पुस्तिका स्वीकार न करें।
   (ii) **कवर पृष्ठ पर छपे निर्देशानुसार प्रश्न-पुस्तिका के पृष्ठ तथा प्रश्नों की संख्या को अच्छी तरह चैक कर लें कि ये पूरे हैं। दोषपूर्ण पुस्तिका जिनमें पृष्ठ/प्रश्न कम हों या दुबारा आ गये हों या सीरियल में न हों अर्थात किसी भी प्रकार की त्रुटिपूर्ण पुस्तिका स्वीकार न करें तथा उसी समय उसे लौटाकर उसके स्थान पर दूसरी सही प्रश्न-पुस्तिका ले लें। इसके लिए आपको पाँच मिनट दिये जायेंगे। उसके बाद न तो आपकी प्रश्न-पुस्तिका वापस ली जायेगी और न ही आपको अतिरिक्त समय दिया जायेगा।**
   (iii) इस जाँच के बाद प्रश्न-पुस्तिका की क्रम संख्या OMR पत्रक पर अंकित करें और OMR पत्रक की क्रम संख्या इस प्रश्न-पुस्तिका पर अंकित कर दें।
4. प्रत्येक प्रश्न के लिए चार उत्तर विकल्प (A), (B), (C) तथा (D) दिये गये हैं। आपको सही उत्तर के दीर्घवृत्त को पेन से भरकर काला करना है जैसा कि नीचे दिखाया गया है।

   **उदाहरण :** (A) (B) ● (D)

   जबकि (C) सही उत्तर है।
5. प्रश्नों के उत्तर **केवल प्रश्न पत्र I के अन्दर दिये गये** उत्तर-पत्रक पर ही अंकित करने हैं। यदि आप उत्तर पत्रक पर दिये गये दीर्घवृत्त के अलावा किसी अन्य स्थान पर उत्तर चिन्हांकित करते है, तो उसका मूल्यांकन नहीं होगा।
6. अन्दर दिये गये निर्देशों को ध्यानपूर्वक पढ़ें।
7. कच्चा काम (Rough Work) इस पुस्तिका के अन्तिम पृष्ठ पर करें।
8. यदि आप उत्तर-पुस्तिका पर अपना नाम या ऐसा कोई भी निशान जिससे आपकी पहचान हो सके, किसी भी भाग पर दर्शाते या अंकित करते हैं तो परीक्षा के लिये अयोग्य घोषित कर दिये जायेंगे।
9. आपको परीक्षा समाप्त होने पर उत्तर-पुस्तिका निरीक्षक महोदय को लौटाना आवश्यक है और परीक्षा समाप्ति के बाद अपने साथ परीक्षा भवन से बाहर न लेकर जायें।
10. **केवल नीले/काले बाल प्वाईंट पैन का ही इस्तेमाल करें।**
11. **किसी भी प्रकार का संगणक ( कैलकुलेटर ) या लाग टेबल आदि का प्रयोग वर्जित है।**
12. **गलत उत्तर के लिए अंक नहीं काटे जायेंगे।**

## TAMIL
## PAPER – II

**Note:** This paper contains fifty (50) multiple-choice questions, each question carrying two (2) marks. Attempt all the questions.

**குறிப்பு :** இத்தாளில் ஐம்பது (50) விடைதெரி வினாக்கள் உள்ளன. ஒவ்வொரு வினாவும் இரண்டு (2) மதிப்பெண்கள் உடையது. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

**1.** ஆற்றுப்படைகளுள் 269 அடிகளால் ஆனது :

(A) திருமுருகாற்றுப் படை (B) சிறுபாணாற்றுப் படை

(C) பொருநராற்றுப் படை (D) பெரும்பாணாற்றுப் படை

**2.** ‘உயிர் தவச் சிறிது காமமோ பெரிதே’ எனும் அடி இடம் பெறும் இலக்கியம் :

(A) நற்றிணை (B) குறுந்தொகை

(C) ஐங்குறுநூறு (D) புறநானூறு

**3.** முப்பால் என்பதன் வேறு பெயர் :

(A) முத்தொள்ளாயிரம் (B) திருக்குறள்

(C) மூவருலா (D) மும்மணிக் கோவை

**4.** நானாற்பது இடம் பெறுவது :

(A) கீழ்க் கணக்குள் (B) மேற் கணக்குள்

(C) திருமுறையுள் (D) திவ்ய பிரபந்தத்துள்

**5.** ‘ புனையா ஓவியம் ’ எனப் பாண்டிமாதேவியைக் குறிப்பிட்டவர் :

(A) கபிலர் (B) பரணர்

(C) நக்கீரர் (D) ஔவையார்

6. சங்கப்பாடல்கள் பலவற்றுக்கு உரை எழுதியவர் :

(A) இளம் பூரணர் (B) சேனாவரையர்

(C) அடியார்க்கு நல்லார் (D) நச்சினார்க்கினியர்

7. ‘போற்றா ஒழுக்கம் புரிந்தீர்’ - எவர் கூற்று ?

(A) மாதவி (B) கோவலன்

(C) கவுந்தியடிகள் (D) கண்ணகி

8. விருத்தப்பாவில் தோன்றிய முதல் காப்பியம் :

(A) கம்பராமாயணம் (B) சிலப்பதிகாரம்

(C) சீவக சிந்தாமணி (D) மணிமேகலை

9. ‘ஏழிசையாய் இசைப்பயனாய் உள்ளவன்’ என்றவர் :

(A) ஞான சம்பந்தர் (B) திருநாவுக்கரசர்

(C) சுந்தரர் (D) மாணிக்க வாசகர்

10. நூற்குப் பெயரிடும் முறை பற்றிக் குறிப்பிடுவது :

(A) தொல்காப்பியம் (B) நன்னூல்

(C) யாப்பருங்கலக்காரிகை (D) தண்டியலங்காரம்

11. தொல்காப்பியத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் :

(A) தெ. பொ. மீ (B) தேவநேயப் பாவாணர்

(C) மு. வரதராசனார் (D) இலக்குவனார்

12. திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் :

(A) வீரமாமுனிவர் (B) போப்

(C) கால்டுவெல் (D) எல்லீசு

**13.** இறையின்மையைப் பாடியவர் :

(A) பாரதியார் (B) கவிமணி

(C) பாவேந்தர் (D) நாமக்கல்லார்

**14.** ‘இறந்தவர் பிறப்பதில்லை இல்லைஇல்லை இல்லையே’ எனக் கூறியவர்

(A) குதம்பைச் சித்தர் (B) சிவவாக்கியார்

(C) திருமூலர் (D) பட்டினத்தார்

**15.** எழுத்து இதழை நடத்தியவர் :

(A) கு. ப. ரா (B) பி. எஸ். இராமையா

(C) சி. சு. செல்லப்பா (D) பசுவய்யா

**16.** தமிழ்ச் சுவடிகளின் பதிப்பு முன்னோடி :

(A) உ. வே. சா (B) வ. உ. சி

(C) சி. வை. தாமோதரனார் (D) வையாபுரிப்பிள்ளை

**17.** **உறுதிக்கூற்று (உ) :** சங்கப்பாடல்கள் அனைத்தும் நாடகப் பாங்கானவை

**காரணம் (கா) :** ஒவ்வொரு பாடலும் மாந்தர்களின் கூற்று

(A) (உ), (கா) இரண்டும் சரி

(B) (உ) சரி ; (கா) சரியன்று

(C) (உ) சரியன்று ; (கா) சரி

(D) (உ), (கா) இரண்டும் சரியல்ல

**18.** **உறுதிக் கூற்று (உ) :** ‘பட்டினம் பெறினும் தலைவியைப் பிரியேன்’ என்பது தலைவன் கூற்று

**காரணம் (கா) :** பாடலாசிரியர் இகழ்ச்சி உத்தியைக் கையாண்டுள்ளார்

(A) (உ) சரியன்று ; (கா) சரி

(B) (உ), (கா) இரண்டும் சரியல்ல

(C) (உ) சரி ; (கா) சரியன்று

(D) (உ), (கா) இரண்டும் சரி

**19.** **உறுதிக்கூற்று (உ) :** ஆசிரியரால் பெயர் பெற்றது நாலடியார்

**காரணம் (கா) :** அது வெண்பாக்களால் பாடப்பட்டது

(A) (உ), (கா) இரண்டும் சரி

(B) (உ) சரி ; (கா) சரியன்று

(C) (உ) சரியன்று ; (கா) சரி

(D) (உ), (கா) இரண்டும் சரியல்ல

**20.** **உறுதிக்கூற்று (உ) :** ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று பெருங்கதை

**காரணம் (கா) :** 'பிருகத்கதா' என்னும் வடநூலின் தழுவல் அது

(A) (உ), (கா) இரண்டும் சரி

(B) (உ) சரி ; (கா) சரியன்று

(C) (உ) சரியன்று ; (கா) சரி

(D) (உ), (கா) இரண்டும் சரியல்ல

**21.** **உறுதிக்கூற்று (உ) :** நாக குமார காவியம் சமண சமய நூல்

**காரணம் (கா) :** பஞ்சமி நோன்பின் சிறப்பைக் கூறுவது அது

(A) (உ) சரி ; (கா) சரியன்று

(B) (உ) சரியன்று ; (கா) சரி

(C) (உ), (கா) இரண்டும் சரி

(D) (உ), (கா) இரண்டும் சரியல்ல

**22.** **உறுதிக்கூற்று (உ) :** சிவபெருமானிடம் தமிழைத் தூதுவிட்டவர் சொக்கநாதப் புலவர்

**காரணம் (கா) :** தமிழின் சிறப்பைப் பாடுவது

(A) (உ) சரி ; (கா) சரியன்று

(B) (உ) சரியன்று ; (கா) சரி

(C) (உ), (கா) இரண்டும் சரியல்ல

(D) (உ), (கா) இரண்டும் சரி

23. **உறுதிக்கூற்று (உ) :** சைவமும் தமிழும் ஆறுமுக நாவலரின் இரு கண்கள்

**காரணம் (கா) :** யாழ்ப் பாணத்தில் ஏற்பட்ட சமயத்தாக்கம்

(A) (உ) சரி ; (கா) சரியன்று

(B) (உ), (கா) இரண்டும் சரி

(C) (உ) சரியன்று ; (கா) சரி

(D) (உ), (கா) இரண்டும் சரியல்ல

24. **உறுதிக்கூற்று (உ) :** ஈஸ்வர அல்லா தேரே நாம் - ஜெயகாந்தன் படைப்பில் ஒரு தனித்தன்மையான நாவல்

**காரணம் (கா) :** மத நல்லிணக்கத்தை எடுத்துரைப்பது

(A) (உ) சரி ; (கா) சரியன்று

(B) (உ) சரியன்று ; (கா) சரி

(C) (உ), (கா) இரண்டும் சரி

(D) (உ), (கா) இரண்டும் சரியல்ல

25. **உறுதிக்கூற்று (உ) :** 'இதுவரை நான்' - வைரமுத்துவின் கவிதைத்தொகுப்பினின்றும் வேறுபட்ட நூல்

**காரணம் (கா) :** தன்வரலாறு கூறும் கவிதைத்தொகுப்பு

(A) (உ) சரியன்று ; (கா) சரி

(B) (உ), சரி ; (கா) சரியன்று

(C) (உ), (கா) இரண்டும் சரியல்ல

(D) (உ), (கா) இரண்டும் சரி

26. **உறுதிக்கூற்று (உ) :** ஆர். சண்முகசுந்தரத்தின் படைப்புகள் வட்டார நாவல்களின் முன்னோடி

**காரணம் (கா) :** ஆசிரியர் நகரவாழ்க்கையில் ஈடுபாடுடையவர்

(A) (உ) (கா) இரண்டும் சரி

(B) (உ) சரி ; (கா) சரியன்று

(C) (உ), (கா) இரண்டும் சரியல்ல

(D) (உ) சரியன்று ; (கா) சரி

27. நிரல்படுத்துக :

தொல்காப்பிய எழுத்ததிகார இயல்கள் :

(A) நூன்மரபு, மொழிமரபு, புணரியல், பிறப்பியல்

(B) நூன்மரபு, புணரியல், பிறப்பியல், மொழிமரபு

(C) நூன்மரபு, பிறப்பியல், புணரியல், மொழிமரபு

(D) நூன்மரபு, மொழிமரபு, பிறப்பியல், புணரியல்

28. நிரல்படுத்துக :

ஆடவர் பருவம்

(A) பாலன், திறலோன், மீளி, மறவோன்

(B) பாலன், மீளி, திறலோன், மறவோன்

(C) பாலன், மீளி, மறவோன், திறலோன்

(D) பாலன், மறவோன், திறலோன், மீளி

29. நிரல் படுத்துக :

வாயில்கள்

(A) தோழி, தாய், பார்ப்பான், பாங்கன்

(B) தோழி, தாய், பாங்கன், பார்ப்பான்

(C) தோழி, பாங்கன், பார்ப்பான், தாய்

(D) தோழி, பார்ப்பான், பாங்கன், தாய்

30. நிரல்படுத்துக :

சித்தாந்த சாத்திரஙகள்

(A) உந்தி, களிறு, சித்தியார், போதம்

(B) உந்தி, களிறு, போதம், சித்தியார்

(C) உந்தி, போதம், களிறு, சித்தியார்

(D) உந்தி, போதம், சித்தியார், களிறு

31. நிரல்படுத்துக :

ஆழ்வார்கள்

(A) திருமழிசையாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார்

(B) திருமழிசையாழ்வார், பெரியாழ்வார், திருமங்கையாழ்வார்,ஆண்டாள்

(C) திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள்

(D) திருமழிசையாழ்வார், ஆண்டாள், பெரியாழ்வார், திருமங்கையாழ்வார்

32. நிரல்படுத்துக :

தெய்வமேறிய சாலினியின் பாராட்டுரை

(A) கொங்கச்செல்வி, குடமலையாட்டி, தவக்கொழுந்து, தென்தமிழ்ப்பாவை

(B) கொங்கச்செல்வி, தவக்கொழுந்து, தென்தமிழ்ப்பாவை, குடமலையாட்டி

(C) கொங்கச்செல்வி, தென்தமிழ்ப்பாவை, தவக்கொழுந்து, குடமலையாட்டி

(D) கொங்கச்செல்வி, குடமலையாட்டி, தென்தமிழ்ப்பாவை, தவக்கொழுந்து

33. நிரல்படுத்துக :

நரம்புக் கருவிகள்

(A) மகரயாழ், பேரியாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ்

(B) மகரயாழ், சகோடயாழ், பேரியாழ், செங்கோட்டியாழ்

(C) மகாயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ், பேரியாழ்

(D) மகரயாழ், செங்கோட்டியாழ், பேரியாழ், சகோடயாழ்

34.. நிரல்படுத்துக :

முதுமொழியின் பண்புகள்

(A) நுண்மை, சுருக்கம், மென்மை, ஒளியுடைமை

(B) நுண்மை, மென்மை, சுருக்கம், ஒளியுடைமை

(C) நுண்மை, சுருக்கம், ஒளியுடைமை, மென்மை

(D) நுண்மை, மென்மை, ஒளியுடைமை, சுருக்கம்

**35.** நிரல்படுத்துக :

சொல்வகை

(A) இயற்சொல், வடசொல், திரிசொல், திசைச்சொல்

(B) இயற்சொல், வடசொல், திசைச்சொல், திரிசொல்

(C) இயற்சொல், திசைச்சொல், வடசொல், திரிசொல்

(D) இயற்சொல், திசைச்சொல், திரிசொல், வடசொல்

**36.** பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | பாலை | (i) | நல்லுருத்திரன் |
| (b) | மருதம் | (ii) | நல்லந்துவன் |
| (c) | முல்லை | (iii) | பெருங்கடுங்கோன் |
| (d) | நெய்தல் | (iv) | இளநாகன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (iii) | (ii) | (iv) | (i) |
| (B) | (iii) | (i) | (ii) | (iv) |
| (C) | (iii) | (ii) | (i) | (iv) |
| (D) | (iii) | (iv) | (i) | (ii) |

**37.** பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | கண்ணஞ் சேந்தனார் | (i) | ஏலாதி |
| (b) | கண்ணங்கூத்தனார் | (ii) | திணைமொழி ஐம்பது |
| (c) | கணிமேதாவியார் | (iii) | சிறுபஞ்சமூலம் |
| (d) | காரியாசான் | (iv) | கார் நாற்பது |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (ii) | (iv) | (iii) | (i) |
| (B) | (ii) | (iv) | (i) | (iii) |
| (C) | (ii) | (iii) | (iv) | (i) |
| (D) | (ii) | (iii) | (i) | (iv) |

**38.** பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | கல்வி கரையில கற்பவர் நாள்சில | (i) | நான்மணிக்கடிகை |
| (b) | பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் | (ii) | திரிகடுகம் |
| (c) | அல்லவை செய்வார்க்கு அறம் கூற்றம் | (iii) | குறள் |
| (d) | நெஞ்சம் அடங்குதல் வீடாகும் | (iv) | நாலடியார் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (iv) | (iii) | (i) | (ii) |
| (B) | (iv) | (iii) | (ii) | (i) |
| (C) | (iv) | (ii) | (iii) | (i) |
| (D) | (iv) | (ii) | (i) | (iii) |

**39.** பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | உம்மைத் தொகை | (i) | <u>சாரைப் பாம்பு</u> |
| (b) | உவமைத் தொகை | (ii) | <u>மீன்மதி</u> தவழும் வேளை |
| (c) | வினைத் தொகை | (iii) | <u>மீன் விழி</u> மாது |
| (d) | இருபெயரொட்டுப் பண்புத் தொகை | (iv) | <u>மையுண்</u> விழிகள் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (ii) | (i) | (iv) | (iii) |
| (B) | (ii) | (i) | (iii) | (iv) |
| (C) | (ii) | (iii) | (i) | (iv) |
| (D) | (ii) | (iii) | (iv) | (i) |

**40.** பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | ஒரு கிராமத்து நதி | (i) | ஈரோடு தமிழன்பன் |
| (b) | சேரமான் காதலி | (ii) | அப்துல் ரகுமான் |
| (c) | வணக்கம், வள்ளுவ | (iii) | சிற்பி |
| (d) | ஆலாபனை | (iv) | கண்ணதாசன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (iii) | (iv) | (ii) | (i) |
| (B) | (iii) | (iv) | (i) | (ii) |
| (C) | (iii) | (i) | (ii) | (iv) |
| (D) | (iii) | (ii) | (i) | (iv) |

**41.** பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | பண்டிதமணி | (i) | சாகுந்தலம் |
| (b) | மறைமலையடிகள் | (ii) | மிருச்சகடிகம் |
| (c) | பரிதிமாற் கலைஞர் | (iii) | இரகசியவழி |
| (d) | சுந்தரம் பிள்ளை | (iv) | முத்ராராக்ஷஸம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (ii) | (i) | (iv) | (iii) |
| (B) | (ii) | (i) | (iii) | (iv) |
| (C) | (ii) | (iii) | (iv) | (i) |
| (D) | (ii) | (i) | (iii) | (iv) |

**42.** பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | சடையப்பர் | (i) | திவாகரர் |
| (b) | சேந்தன் | (ii) | உமறு |
| (c) | சந்திர சுவர்க்கி | (iii) | கம்பர் |
| (d) | சீதக்காதி | (iv) | புகழேந்தி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (iii) | (ii) | (i) | (iv) |
| (B) | (iii) | (i) | (ii) | (iv) |
| (C) | (iii) | (i) | (iv) | (ii) |
| (D) | (iii) | (ii) | (iv) | (i) |

**43.** பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | சுரதா | (i) | இந்தியா |
| (b) | கண்ணதாசன் | (ii) | குயில் |
| (c) | பாரதிதாசன் | (iii) | தென்றல் |
| (d) | பாரதியார் | (iv) | இலக்கியம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (iv) | (iii) | (ii) | (i) |
| (B) | (iv) | (iii) | (i) | (ii) |
| (C) | (iv) | (ii) | (i) | (iii) |
| (D) | (iv) | (i) | (ii) | (iii) |

44. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | சமுதாயவீதி | (i) | பொன்னீலன் |
| (b) | வேருக்கு நீர் | (ii) | இந்திரா பார்த்தசாரதி |
| (c) | குருதிப்புனல் | (iii) | ராஜம் கிருஷ்ணன் |
| (d) | புதிய தரிசனங்கள் | (iv) | நா. பார்த்தசாரதி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (iv) | (ii) | (i) | (iii) |
| (B) | (iv) | (i) | (ii) | (iii) |
| (C) | (iv) | (iii) | (i) | (ii) |
| (D) | (iv) | (iii) | (ii) | (i) |

45. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | விருத்தாசலம் | (i) | கு. அழகிரிசாமி |
| (b) | மணி | (ii) | சுஜாதா |
| (c) | செல்லையா | (iii) | புதுமைப்பித்தன் |
| (d) | ரங்கராஜன் | (iv) | மௌனி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (iii) | (iv) | (i) | (ii) |
| (B) | (iii) | (iv) | (ii) | (i) |
| (C) | (iii) | (i) | (ii) | (iv) |
| (D) | (iii) | (i) | (iv) | (ii) |

பின் வரும் பகுதியைப் படித்துப்பார்த்துத் தொடர்ந்து இடம் பெற்றுள்ள வினாக்ளுக்கு ஏற்ற விடையைச் சுட்டுக.

உலக நாகரிகங்களில் சிறந்தவற்றை வரலாற்று முறையில் ஆராய்ந்த டாயின்பி என்ற பேராசிரியர் அத்தகைய நாகரிகங்களில் இந்திய நாகரிகத்தினையும் குறித்து வைத்து ஆராய்ந்துள்ளார். இந்திய நாகரிகத்தின் சிறந்த கூறாகத் தமிழ் நாகரிகமும் தமிழர்களும் விளங்குகிறார்கள் எனலாம். இந்திய நாகரிகத்தில் பல்வேறு கூறுகள் கலந்திருந்தாலும் திராவிடக் கூறும் ஆரியக் கூறும் எலும்பும் குருதியுமாக அல்லது உயிரும் உடம்புமாக இணைந்துள்ளன என்றும் கூறலாம். திராவிடக் கூற்றின் சிறப்பு நிலை தமிழிலும் தமிழரிடமும் இன்றுவரை காக்கப் பெற்று வருவதால், அதனைத் தமிழ்க்கூறு என்றும் ஒருவகையில் கூறலாம். மொகஞ்சோதாரோ, ஹரப்பா முதலிய இடங்களில் கண்ட சிந்துவெளி நாகரிகம், திராவிட நாகரிகமாகத்தான் இருக்க வேண்டுமென்று பலர் கருதுவதால் இதன் பழமையையும் பிற பழைய நாகரிகங்களோடு இது கொண்டிருந்த தொடர்பினையும் வற்புறுத்த வேண்டுவதில்லை. எனவே இந்திய நாகரிகத்தினை உருவாக்கிய பெருமை - அதன் உயிர்நிலையாய் நிற்கும் பெருமை - மேற்கூறிய பரந்த பொருளில் தமிழருக்கு உரியதாகும்.

பசுபதி என்ற கருத்து, தாய்மை வழிபாடு, யோகப் போக்கு முதலியவை சிந்துவெளி நாகரிகத்திலேயே வளர்ந்திருப்பவை என்று அதை முதன் முதல் வெளியிட்ட ‘மார்ஷல்’ என்பவர் விளக்கியுள்ளார்.

தமிழக வரலாறு தொடங்கிய காலத்திலிருந்தே ஆன்மீக ஆராய்ச்சியிலும் தமிழர் பெரும்பங்கு கொண்டு தொண்டாற்றியுள்ளனர். சங்கரர், இராமானுஜர் என்ற பெரும் பேராசான்கள் தமிழ் நாட்டவர்கள். சங்கரர் காலத்தில் மலையாள நாடு சேரநாடாகத் தமிழகத்தில் ஒரு பகுதியாகவே விளங்கியது. சங்கரரே, ஆசாரியார் சுந்தரபாண்டியரை வேதாந்தியாகக் குறிப்பதால் இந்த ஆன்மீக ஆராய்ச்சி தமிழர்கள் குடும்பத்திலும் செழித்து வளர்ந்தது எனலாம். தமிழகத்தில் பௌத்தர்களும் ஜைனர்களும் தத்தம் மதங்கனள வளர்த்ததை விரித்துரைக்க வேண்டா. இந்தியாவின் இடைக்கால வரலாற்றில் பக்திஇயக்கம் உயிர் நிலையாக விளங்குகிறது. அந்த இயக்கம் காவிரிக் கரையிலும் தாமிரபரணிக்கரையிலும் நாயன்மார்கள் பாடல்களாகவும் ஆழ்வார்கள் பாடல்களாகவும் தோன்றி இராமானுஜர் வழியே இந்தியா முழுவதும் பாய்ந்து நாட்டின் உயிரைச் செழிக்கச் செய்தது.

**46.** இந்திய நாகரிகத்தை ஆராய்ந்தவர்

(A) மார்ஷல்

(B) எல்லீஸ் துரை

(C) டாயின்பி

(D) வில்லியம் ஜோன்ஸ்

**47.** **உறுதிக்கூற்று (உ) :** தமிழக வரலாற்றின் தொடக்கத்தில் ஆன்மீக ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்கள் தமிழர்கள்

**காரணம் (கா) :** சங்கரர், இராமானுஜர் தமிழ்நாட்டவர்கள்

(A) (உ) சரி ; (கா) சரியன்று

(B) (உ), (கா) இரண்டும் சரி

(C) (உ) சரியன்று ; (கா) சரி

(D) (உ), (கா) இரண்டும் சரியல்ல

**48.** நிரல் படுத்துக :

இந்திய நாகரிகத்தில் திராவிடக் கூறும் ஆரியக் கூறும்

(A) எலும்பு, குருதி, உயிர், உடம்பு

(B) குருதி, உயிர், எலும்பு, உடம்பு

(C) உயிர், உடம்பு, குருதி, எலும்பு

(D) உடம்பு, உயிர், எலும்பு, குருதி

**49.** பக்தி இயக்கம் வளர்ந்த இடங்கள் :

(A) காவிரிக்கரை, தாமிரபரணிக்கரை

(B) காவிரிக்கரை, வையைக்கரை

(C) தாமிரபரணிக்கரை, வையைக்கரை

(D) காவிரிக் கரை, பெரியாற்றுக்கரை

**50.** பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | சிந்துவெளிநாகரிகம் | (i) | சுந்தர பாண்டியன் |
| (b) | பசுபதி | (ii) | திராவிட நாகரிகம் |
| (c) | வேதாந்தி | (iii) | இராமானுஜர் |
| (d) | ஆன்மீக ஆராய்ச்சியாளர் | (iv) | தாய்மை வழிபாடு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (iv) | (ii) | (i) | (iii) |
| (B) | (i) | (ii) | (iv) | (iii) |
| (C) | (ii) | (iv) | (i) | (iii) |
| (D) | (iii) | (ii) | (i) | (iv) |

- o O o -

**Space For Rough Work**